

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர்-18 இதழ்-11 நவம்பர்-2005

## கிறிஸ்துவின் சபை


தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. பாதுகாப்பான வழிகாட்டியாக மனசாட்சியை நாம் ஏற்றுக்கொள்ளாதது ஏன்? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. யோவான் ஒரு கண்ணோட்டம் ........ 22
7. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 23
8. பரமபிதாவின் சித்தத்தின் படி செய்யுங்கள் ........ 28

THIRUMARAI AASAAN
Published by Church of Christ
S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 18 November - 2005 Issue - 11

ஆசிரியர் உரை

# பாதுகாப்பும், அடைக்கலமும்

பாதுகாப்பு அல்லது பாதுகாப்பு உணர்வு என்பது, உலகில் வாழும் அனைத்து உயிரினங்களிடத்திலும் காணப்படும் பொதுவான ஒன்றாகவே உள்ளது. ஒருவேளை அவை சிறியவைகளாக இருந்தாலும், பெரியவைகளாக இருந்தாலும் இவ்வுணர்வை நாம் நிச்சயமாகவே அவைகளிடம் காண முடியும். எறும்பு புற்றை உண்டாக்குவதும், எலி வங்கு பறிப்பதும், குருவி கூடு கட்டுவதும், நரி குழிகளில் அண்டிக்கொள்வதும், சிங்கம் குகையைத் தேடிக் கொள்வதும் இந்த உணர்வினடிப்படையில்தான். இவ்வுணர்வுக்கு, உயிரினங்களின் சிகரமாக விளங்கும் மனிதனும் விதிவிலக்கானவனாக இல்லை. சரீரப்பிரகாரமாகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற அந்த உணர்வு அவனிடம் எப்போதும் மிகுந்து காணப்படுகிறது. அதற்காக மனிதன், தான் உண்ணும் உணவிலும், உடுத்தும் உடையிலும், செய்யும் வேலையிலும், வசிக்கும் இடத்திலும் அதிகம் கவனம் செலுத்துகிறான். இப்படிக் கவனம் செலுத்திக் காரியம் செய்தாலும், அதிலே ஏதாகிலும் தவறு நேர்ந்துவிட்டால் என்ன செய்வது என்று சிந்தித்து, அதற்காகவும் மனத்தளவில் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுகிறான். அப்படித்தானே

இப்படி அழிந்துபோகும் சரீரத்திற்கும், சரீர வாழ்விற்கும் பாதுகாப்பு வேண்டுமென்று நினைக்கும் மனிதன், தனக்குள்ளாக என்றும் அழியாமல் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கும் ஆத்துமாவிற்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சுத்தமாகக் கவலைப்படுவதில்லை அல்லது அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை ஆனால், மனிதனின் சரீரத்தையும், ஆன்மாவையும் படைத்த தேவன் இவ்விரண்டின் மீதும் அக்கறையுள்ள

வராயிருந்து, இரண்டுமே பாதுகாப்பாக இருக்கவேண்டுமென்று எண்ணி செயல்பட்டு வந்திருக்கிறார். அது முற்பிதாக்களின் காலமாக இருந்தாலும், மோசேயின் காலமாக இருந்தாலும், கிறிஸ்துவின் காலமாக இருந்தாலும் இதுதான் உண்மை. இப்படி மனிதனின் பாதுகாப்பில் அக்கறை செலுத்தும் தேவன், **அவனுக்கான பாதுகாப்பு எங்கே இருக்கிறது என்பதையும் தவறாமல் வெளிப்படுத்தியுள்ளார்.**

இங்கே ஒரு முக்கியமான கருத்தை நாம் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது. அதாவது, தேவன் மூன்று காலங்களிலும், பாதுகாப்பை ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்கிறார் என்று சொல்லும் போது அப்படியானால், மற்ற இடங்களிலிருந்தால் தேவனால் பாதுகாக்க முடியாதா என்ற கேள்வி எழவாய்ப்புண்டு. ஆனால், **தேவனாலே ஒன்று முடியுமா அல்லது முடியாதா என்ற கேள்விக்கு எப்பொழுதும் இடமில்லை.** ஏனெனில், **"தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை"** (லூக். 1:37) என்று வேதாகமம் திட்டமாகக் கூறுகிறது. சர்வவல்ல தேவன், தான் நேசிக்கும் மனிதனுக்குக் கொடுக்க விரும்பும் ஆசீர்வாதத்தையும், பாதுகாப்பையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் கொடுக்க முடியும் என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தான் தரமுடியும் என்றோ அல்லது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் தான் கூட்டி வழங்க முடியுமென்றோ சொல்லி அவருடைய வல்லமைக்கு நாம் எல்லை வகுக்கக்கூடாது. ஆனால், அதே நேரத்தில், தேவன் தன்னுடைய காரியங்களை அவருடைய அநந்த ஞானத்தைக் கொண்டு, அவர் வகுத்துள்ள திட்டத்தின் படியும், ஏற்படுத்தியுள்ள விதிமுறைகளின் படியும் தான் நாம் செய்ய வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிறார் என்பதையும் நாம் புரிந்து கொள்ளத் தவறிவிடக்கூடாது. தேவனுடைய ஆசீர்வாத த்தையும், பாதுகாப்பையும், அடைக்கலத்தையும் பெற்றுக் கொள்ள விரும்பும் மனிதன் இவ்வுண்மையை எப்பொழுதும் தன் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

சரி, இந்த உண்மையை மனதில் இருத்தினவர்களாக, தேவனாலே மனிதனுக்காக வெளிப்படுத்தப் பட்ட பாதுகாப்பு, ஒவ்வொரு காலத்திலும் எங்கெங்கே வைக்கப்பட்டிருக்கிறதென்று கண்டு, அவைகளின் மூலம் நமக்கு என்ன பாடம் கிடைக்கிறதென்று பார்ப்போம்.

## I நோவாவின் நாட்களில் பேழைக்குள் பாதுகாப்பு

**முதலாவது**, சர்வ வல்ல தேவன், தமது அநந்த ஞானத்தின்படியாக நோவாவின் நாட்களில் பாதுகாப்பை எங்கே வைத்தாரென்று பார்ப்போம்.

நோவாவின் நாட்களில், அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும் அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது என்றும் கண்டு தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர்

மனஸ்தாபப்பட்டாரென்று காண்கிறோம். (ஆதி. 6:5-6) தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணனாக அவர் இருப்பதால் (ஆபகூக். 1:13) பாவத்தால் நிறைந்த பூமியை அழிக்க அவர் மனதில் எண்ணங்கொண்டார். ஆயினும், தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்காகத் தம்முடைய கண்களை பூமியெங்கும் உலாவ விடும் தேவனின் கண்கள் (II நாளா 16:9) உத்தம இருதயத்தோடு வாழ்ந்து கொண்டிருந்த நோவாவைக் கண்டது. இதன்மூலம் நோவாவுக்கு அவருடைய கண்களில் கிருபை கிடைத்தது. (ஆதி 6:8).

நீதிமான்களை ஒருபோதும் கைவிடாத பரலோக தேவன் நோவாவைக் காப்பாற்றும்படியாய் ஒரு பேழையை உண்டு பண்ணச் சொல்லி, அதற்கான அளவுகளையும் துல்லியமாகக் கொடுத்தார். ஆதி. 7:22 சொல்லுகிறது, **''நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடி யெல்லாம் அவன் செய்து முடித்தான் என்று''** பிறகு நாற்பது நாள் இரவும், பகலும் பூமியின்மேல் பெருமழை பெய்தது ''(7:12) அன்றைத்தினமே நோவாவும், நோவாவின் குமாரராகிய சேமும், காமும், யாப்பேத்தும். அவர்களுடனே கூட நோவாவின் மனைவியும் அவன் குமாரரின் மூன்று மனைவிகளும் **பேழைக்குள்** பிரவேசித்தார்கள். (7:13) பெருவெள்ளம் காரணமாக, ''வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவ சுவாசமுள்ளவைகள் எல்லாம் மாண்டு போயின'' (7:22) என்றும், **நோவாவும் அவனோடே பேழையினுள்ளிருந்த, உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டது** (7:23) என்றும் காண்கிறோம்.

இங்கே நாம் ஒரு கேள்வியை, நம் குறைந்த அறிவைக் கொண்டு எழுப்ப முடியும். நோவாதான், நீதிமானும், உத்தமனுமாயிற்றே; அவனைக் காப்பற்ற தேவன் 120 ஆண்டுகள் காக்க வைத்து, பாடுகள் படவைத்து மழையையும், பெருவெள்ளத்தையும் வரவழைத்து, அதிலிருந்து காப்பாற்றப்பட பேழைக்குள் பிரவேசி என்று கட்டளையும் கொடுத்து, இப்படியெல்லாம் செய்துதான் அந்த நீதிமானைக் காப்பாற்ற வேண்டுமா? நோவாவைக் காப்பாற்ற தேவனுக்கு வேறு வழியே இல்லையா? என்று. நமது அறிவின்படி பார்த்தால், இப்படிக் கேட்பது நியாயமாகவே தெரிகிறது. ஆனால், இங்கே ஒன்றை நாம் கண்டிப்பாகப் புரிந்து கொள்ள வேண்டும். சர்வ வல்ல தேவனுக்கு நோவாவைக் காப்பாற்ற பெருவெள்ளம், பேழை வழியைப் போல ஆயிரம் வழிகளை உண்டாக்கியிருக்க முடியும். 120 ஆண்டுகள் காக்க வைத்துக் காப்பாற்ற வேண்டிய அவசியம் அவருக்கில்லை. நொடிப்பொழுதில் பூமியை நிக்கிரகம் செய்து, இமைப்பொழுதில் நோவாவைக் காப்பாற்றியிருக்கவும் முடியும். ஆனால், **தேவன் தமது திட்டத்தின்படி ஒரு வழியைத் தேர்ந்தெடுக்கும் போது, இப்படித்தான் நீ செய்ய வேண்டுமென்று கட்டளையிடும் போது அதை நாம் ஏன் என்று கேட்க முடியாது. கேட்கவும் கூடாது.**

தேவனை எதிர்த்து, அதன் விளைவாக மாடுகளைப் போல் புல்லைத் தின்ற பிறகு புத்தி வந்த ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தேவனுடைய வல்லமை பற்றிக் கூறுவதைக் கவனியுங்கள். "பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப் படுகிறார்கள். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார். **அவருடைய கையைத் தடுத்து அவரை நோக்கி; என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்று** (தானி. 4:35)

அருமையானவர்களே, இதுதான் உண்மை. ஆம், தேவன் மனிதனுக்காக ஒரு வழியைத் தெரிந்தெடுக்கும் போது, அதற்குத் தன்னை ஒப்புக் கொடுக்க வேண்டியது மனுஷர் மேல் விழுந்த கடமை. பேழைக்கு வெளியே தேவன் நோவாவிற்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்கலாம். கட்டளையிட்டிருக்கவும் முடியும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. தேவன் ஒன்றைச் சொல்லி விட்டால், அவன் மாற்று வழிகளை தேவனிடம் கேட்கக் கூடாது. ஒன்று, தேவன் சொன்னபடி செய்து அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் அல்லது தேவ தண்டனைக்குத் தன்னை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டிற்கும் இடைப்பட்டது எதுவுமில்லை.

"**பேழைக்குள் தான் இரட்சிப்பு**" என்று நோவாவிற்கு தேவனால் சொல்லப்பட்டபோது, அவன் அதை ஏற்றுக்கொண்டான். இது குறித்து எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, **விசுவாசத்தினாலே நோவா தற்காலத்தில் காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான், அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளான தென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளி யானான்.** (11:7)

ஆம், விசுவாசத்தினாலே, **தேவன் சொன்னதை ஏற்றுக் கொண்டான்.** விசுவாசத்தினாலே தேவன் சொன்னதற்குக் கீழ்ப்படிந்தான். விசுவாசத்தினாலே தன்னையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொண்டான். விசுவாசத்தினாலே, ஆக்கினையிலிருந்து தப்பித்துக் கொண்டான். விசுவாசத்தினாலே நீதிமானென்று சாட்சி பெற்றான். பேழை அவனையும், அவன் குடும்பத்தையும் இரட்சித்தது. விளங்குகிறதா?.

## II <u>மோசேயின் நாட்களில் வீட்டினுள் பாதுகாப்பு</u>

**இரண்டாவதாக,** பரலோகத்தின் தேவன், தமது அநந்த ஞானத்தின்படியாக, மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து விடுவித்த போது பாதுகாப்பை எங்கே வைத்தாரென்று பார்ப்போம்.

யாக்கோபின் நாட்களில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்திலிருந்து தப்பிக்க (ஆதி. 42:2,3) தானியங் கொள்ளும்படி எகிப்துக்குச் சென்ற யாக்கோபின் குமாரர்கள், ஜீவரட்சனை செய்யும்படி தேவனால் அனுப்பப்பட்ட (ஆதி 45:5) யோசேப்பின் தயவினாலே எகிப்தில் குடியேறி, யோசேப்புக்கு பிறகு அடிமைகளானார்கள். பிறகு, அவர்கள் எகிப்தின் ஆளோட்டிகளால் கடுமையாக நடத்தப்பட்டதின் விளைவாக எழுந்த கூக்குரல் தேவ சமூகத்தை எட்டியது. (யாத். 2:7) அவர்களை விடுவிக்க சித்தங் கொண்டு, தேவன், மோசே என்ற தேவ மனிதனை எழுப்பினார். அவன் பார்வோனுக்கு முன்பாகத் தான் தேவனால் அனுப்பப்பட்டவன் என்பதை நிரூபிக்கும் படியாகவும், தேவனுடைய வல்லமையை அவனுக்கு உணர்த்தும் படியாகவும் வாதைகளை நடப்பித்தான்.

வாதைகளால் வந்த உபாதைகளினிமித்தம் அவன் மிரண்டு போனாலும், அந்த வாதைகள் அவன் இருதயத்தை இளக்குவதற்குப்பதில் இறுக்கியது. அதினால், இஸ்ரவேல் ஜனங்களைப் போகவிடமாட்டேன் என்றான். ஒன்பது வாதைகளைக் கண்டும் அவன் அசரவில்லை. ஒன்பதாவது வாதையாகிய காரிருளின் போது பார்வோன் மோசோயை நோக்கி **''என்னைவிட்டு அப்பாலே போ, நீ இனி என் முகத்தை காணாதபடி எச்சரிக்கையாயிரு; நீ இனி என் முகத்தை காணும் நாளில் சாவாய் என்றான்** (யாத் 10:28) இப்படி எகிப்திய பார்வோனை வழிக்குக் கொண்டுவர தேவனுக்குத் தெரியாதா? இவன் ஏதோ, திக்குவாய் மோசேயோடு மோதிக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்துக் கொண்டான், பாவம். பார்வோனால் விரட்டப்பட்ட நிலையில் கர்த்தர் மோசேயைப் பார்த்து ''இன்னும் ஒரு வாதையைப் பார்வோன் மேலும் எகிப்தின் மேலும் வரப்பண்ணுவேன்; அதற்குப்பின் அவன் உங்களை இவ்விடத்திலிருந்து போக விடுவான்; சமூலமாய் உங்களைப் போக விடுவதுமல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தியும் விடுவான் என்றார்'' (யாத். 11:1) இங்கே தேவன் சொல்லும் கடைசி வாதை என்னவெனில், **''அப்பொழுது சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளை முதல் எந்திரம் அரைக்கும் அடிமைப் பெண்ணுடைய தலைப்பிள்ளை வரைக்கும் எகிப்து தேசத்திலிருக்கிற முதற்பேரனைத்தும், மிருக ஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும் என்றார்.** (11:5).

இப்படி எகிப்தின் தலையீற்றுகள் சாகும் என்று தேவன் சொன்னாலும், **இஸ்ரவேலின் தலையீற்றுகள் அனைத்தையும் இரட்சிக்க சித்தம் கொண்டு, அதற்கான வழிமுறைகள் என்னவென்று வெளிப்படுத்தினார்.** எப்படி நோவா பேழையை உண்டு பண்ணுவதற்குக் குறிப்பாய்க் காரியங்களைச்

சொன்னாரோ அதுபோல, இவர்களை இரட்சிப்பதற்கும் திட்டமான அறிவுரைகளைத் தெளிவாகத் தந்தார். ஆம், அவர்கள் எப்படிப் பஸ்காவை அனுசரிக்க வேண்டுமென்பதை வரையறுத்துத் தந்தார். வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டி, அதற்கு ஒரு வயது, அது பழுதற்றது, அதைச் சாப்பிடத்தக்க அளவு இலக்கம், சாயங்காலத்தில் அடிக்க வேண்டும், நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் இரத்தம் தெளிக்க வேண்டும். நெருப்பினால் சுட்டு புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் சாப்பிடவேண்டும் என்று. (யாத். 12:1-11).

இப்படியாகக் கொடுக்கப்பட்ட கட்டளைகளில் கவனிக்கத்தக்கது 12:22ல் உள்ளது. ''ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்துக் கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து அதில் இருக்கும் அந்த **இரத்தத்தை** வாசல் நிலைக்கால்களின் மேற் சட்டத்திலும், வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும், தெளியுங்கள், **விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலை விட்டுப் புறப்படவேண்டாம்**'' இது தேவக்கட்டளை மீறிப் புறப்பட்டால் என்ன ஆகும்? பாதுகாப்பு இருக்காது. செத்துப்போக வேண்டும். இரட்சிப்பு வேண்டுமானால், தேவன் கட்டளையிட்ட எல்லாவற்றையும் செய்து, **வீட்டிற்குள்ளும்** இருக்க வேண்டும்.

நாம் இங்கே மறுபடியும் கேட்கலாம், வானத்தையும் பூமியையும் வார்த்தையின் வல்லமையினால் உண்டாக்கின தேவனுக்கு இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இரட்சிக்க வேறு வழியே கிடையாதா என்றும், **இரத்தந் தெளிக்கப்பட்ட வீட்டிற்குள் இருந்தால் தான் இரட்சிப்பா என்றும்**. அன்பானவர்களே, தேவன் எப்படி வேண்டுமானாலும் அவர்களை இரட்சித்திருக்க முடியும். அவருடைய வல்லமைக்கு எல்லையில்லை. ஆனால், அவர்கள் இரட்சிக்கப்பட இரத்தமும், வீட்டிற்குள் இருப்பதும் அவசியம் என்று **தேவன் சொல்லிவிட்டால்** அதற்குமேல் நாம் பேச நமக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? பக்தன் யோபு, '' ... என் கையினால் என் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன் '' (யோபு 40:3) என்பது போல் தான் நாம் செயல்படவேண்டும். நாம் அழிவிலிருந்து காப்பாற்றப்படும்படியாய், இரட்சிக்கப்படும்படியாய் தேவன் எவைகளையெல்லாம் செல்லியிருக்கிறாரோ அவைகளையெல்லாம், சாமுவேல் பிள்ளையான்டான் போல், ''கர்த்தாவே செல்லும், அடியேன் கேட்கிறேன்'' என்று செயல்பட வேண்டும். அப்படிச் செய்தால் தான் நாம்முடைய ஆன்மீக வாழ்வில் நாம் காப்பாற்றப்படுவோம்.

ஆம், எகிப்தின் விடுதலையின்போது ''வீட்டிற்குள்'' இருந்தவர்கள் தான் காப்பாற்றப்பட்டார்கள்.

## III கிறிஸ்துவின் காலத்தில் கிறிஸ்துவின் சபைக்குள் பாதுகாப்பு

**மூன்றாவதாக,** தம்முடைய நித்திய தீர்மானத்தின்படி, தமது ஒரே பேரான குமாரனை நமக்காக பூமிக்கு அனுப்பிக் கொடுத்த தேவன் கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நமக்கு, **பாதுகாப்பை** எங்கே வைத்திருக்கிறார் என்று பார்ப்போம்.

முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்த நோவாவின் நாட்களில் பாதுகாப்பும், இரட்சிப்பும் **பேழைக்குள்** இருந்தது. நியாயப்பிரமாணத்தின் காலத்தை ஆரம்பித்து வைத்த மோசேயின் நாட்களில் பாதுகாப்பும், இரட்சிப்பும் **வீட்டிற்குள்** இருந்தது. அப்படியானால், கிறிஸ்துவின் கால்த்தில் வாழும் நமக்குப் பாதுகாப்பும், இரட்சிப்பும் எங்கே உள்ளது? வேதாகமம் இதுபற்றி நமக்கு என்ன கூறுகிறது?

அப்போஸ்தலன் பவுல், தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரனுக்கு எழுதும் போது, ''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவரா யிருக்கிறார்'' என்கிறார். (1தீமோத். 2:4) இப்படி மனிதனின் இரட்சிப்பை விரும்பும் தேவன், அந்த இரட்சிப்பை எங்கே வைத்துள்ளார்? அதே குமாரனுக்குத் தான் எழுதின அடுத்த நிருபத்தில் இதற்கான பதிலை பவுல் கொடுத்துள்ளார். அங்கே, **கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பு** என்றுள்ளது (II தீமோ. 2:10) அதாவது, இரட்சிப்பு கிறிஸ்து இயேசுவினால் கிடைக்கிறது. மேலும், பேதுரு ஆலோசனை சங்கத்தாருக்குப் பதிலளித்த போது, மிகத் தைரியமாய், ''**அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்**'' (அப். 4:12).

மேற்காணும் வசனங்கள் மனிதனிடம் தேவன் விரும்பும் இரட்சிப்பு, **கிறிஸ்துவுக்குள்** தான் என்று உறுதியாகக் கூறுகிறது. கிறிஸ்துவுக்குள் தான் இரட்சிப்பு என்பதும், **கிறிஸ்து காட்டின சபைக்குள் தான் இரட்சிப்பு** என்பதும் ஒன்றுதான். எப்படியெனில், தேவன், ''இயேசுவை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லா வற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய **சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.** (எபே. 1:21-23). **கிறிஸ்து சபைக்குத் தலையாக இருக்கும்போது, கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு என்பதை, கிறிஸ்துவின் சபைக்குள் இரட்சிப்பு என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது?** கிறிஸ்துவையும், சபையையும் நாம் பிரிக்க முடியாது.

எப்படியெனில், சபையைத் துன்பப்படுத்தின சவுலை தமஸ்கூ செல்லும் வழியில் சந்தித்த இயேசு அவனிடம் என்ன சொன்னார்? **ஆண்டவரே, நீர் யார்** என்ற கேள்விக்கு, **நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே** என்றார். சவுல், இயேசுவையா துன்பப்படுத்தினான்? அவன் சபையைத் தானே துன்பப்படுத்தினான். அப்படியானால், இயேசு, ஏன் தன்னைத் துன்பப்படுத்தினதாகக் கூறுகிறார்? கிறிஸ்துவும், சபையும் ஒன்று என்பது தானே அதன் பொருள். ஆக, கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு என்பதை, கிறிஸ்துவின் சபைக்குள் இரட்சிப்பு என்று நாம் தாராளமாக, தைரியமாகக் கூறலாம்.

கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்துவின் சபைக்குள்ளும் தான் இரட்சிப்பு எனில், கிறிஸ்துவுக்குள்ளாக, கிறிஸ்துவின் சபைக்குள்ளாக ஒருவன் வருவது எப்படி? இதுபற்றி பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதும்போது, '' ஒருவன் **கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்** புது சிருஷ்டியாயிருக்கிறான்'' என்கிறார். (கொரி. 5:17) அதாவது, கிறிஸ்துவுக்குள் வருவதும், புது சிருஷ்டியாவதும் ஒருசேர நடக்கும் செயலாக உள்ளது. புது சிருஷ்டியாவது குறித்து பவுல், ரோமாபுரியாருக்கு எங்ஙனம் கூறுகிறார் பாருங்கள். ''மேலும், பிதாவின் மகிமையினாலே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் **புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு** அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் **ஞானஸ்நானத்தினாலே** கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்'' என்று (ரோம. 6:4) இங்கே, **புதியஜீவன்** என்பதும், **புது சிருஷ்டி** என்பதும் ஒன்றுதான் என்பதை நாம் விளங்கிக் கொள்வதற்குப் பெரிய மேதாவித்தனம் எதுவும் தேவையில்லை. இவ்விரண்டும் ஞானஸ்நானத்தினாலே உண்டாகிறது.

அதாவது, பாவமன்னிப்புக் கென்று தண்ணீரில் முழுகி எடுக்கும் ஞானஸ்நானமானது ஒருவனைக் கிறிஸ்துவுக்குள்ளாகவும் கிறிஸ்துவின் சபைக்குள்ளாகவும் கொண்டு வருகிறது. இந்த ஞானஸ்நானம் பற்றி அப்போஸ்தலன் பவுல் கலாத்தியருக்குச் சொல்லும்போது, ''ஏனெனில், உங்களில் **கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே**'' என்கிறார். (கலா. 3:27) ஞானஸ்நானம் ஒருவனைப் பாவங்களிலிருந்து இரட்சித்து கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. **இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.** (அப். 2:47) என்ற வசனத்தின்படி, ஞானஸ்நானத்தின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பு ஒருவனை **கிறிஸ்து கட்டின சபைக்குள்** கொண்டு வருகிறது. இதுபற்றி பவுலாடியார் இன்னும் கூட விளக்கமாக 1 கொரி. 12:13-ல் கூறியுள்ளார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே **ஒரே சரீரத்திற்குள்ளாக (சபைக்குள்ளாக) ஞானஸ்நானம் பண்ணப்பட்டு,** எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் என்று.

கிறிஸ்து கட்டின அந்த **ஒரு சபைக்குள்** தான் நித்திய இரட்சிப்பும் கிறிஸ்துவின் சபைக்குள் தான் உண்டு. எப்படியெனில் பவுல் அப்போஸ்தலன், கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும் போது, "அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு **ராஜ்யத்தை** ஒப்பக்கொடுப்பார் (1 கொரி. 15:24) என்றுள்ளது. ஆம், ஒரு நாளில், அந்த மகத்தான நாளில், இயேசு ராஜ்யமாகிய சபையை பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்போகிறார். அப்பொழுது ராஜ்யமாகிய **சபைக்குள்,** யாரெல்லாம் இருக்கிறார்களோ அவர்கள் மாத்திரமே, **பிதாவினிடம் ஒப்புக்கொடுக்கப்பட்டு நித்திய வீட்டிற்குள்** பிரவேசிப்பார்கள்.

இங்கே கிறிஸ்துவின் சபை, கிறிஸ்துவின் சபை என்று அழுத்திச் சொல்லும்போது, ஏன் இப்படி இவர்கள் அடித்துக் கொள்கிறார்கள், வேறு சபைக்குள்ளாக இருந்தால் பாதுகாப்பும், நித்திய இரட்சிப்பும் கிடையாதா என்று நீங்கள் கேட்கக்கூடும். நியாயந்தான். நமது அறிவைக் கொண்டு பார்த்தால், எங்கிருப்பவர்களையும் இரட்சிக்க தேவனால் முடியும் தான். ஆனாலும், தேவன், **இதுதான் இரட்சிப்புக்கான வழி என்று ஒன்றைச் சொல்லிவிட்டால், நாம் அதைத்தான் செய்தாக வேண்டும்.** இதை சீரணிப்பதற்குக் கொஞ்சம் சிரமமாகத்தானிருக்கும். ஆனால், வேறு வழியில்லை. சொல்லுகிறவர் தேவன். அவர் சொல்லியபடியே **பேழைக்கு** வெளியே யாரும் காப்பாற்றப்படவில்லையென்பதையும், **வீட்டிற்கு** வெளியே இருந்தவர்கள் யாரும் தப்பிக்கவில்லையென்பதையும் மறந்துவிடாதீர்கள். கிறிஸ்துவின் நாமத்தால் தான் இரட்சிப்பு, கிறிஸ்துவின் சபைக்குள் தான் பாதுகாப்பு என்று கிறிஸ்துவின் புதிய ஏற்பட்டு உபதேசம் சொல்லும்போது, அதை அப்படியே ஏற்றுச் செய்யவேண்டியது நமது கடமை. அப்படிச் செய்தால் தான், நாம் நித்திய அழிவிலிருந்து காப்பாற்றப்பட முடியும்.

ஆகையால், இப்பேருண்மையை உணர்ந்து, நீங்கள் செய்ய வேண்டியதைச் செய்ய, அதுவும் உடனே செய்ய உங்கள் ஒவ்வொருவரையும் ஊக்கப்படுத்துகிறேன். ஆமென்.

**S. ராஜநாயகம்**

## பிழை திருத்தம்

கடந்த மாத ஆசிரியர் உரையில் யெரொபெயாம் என்பதற்குப் பதிலாக ரெகொபெயாம் என்று தவறுதலாக அச்சேறிவிட்டது. நேர்ந்து விட்ட தவறுக்கு வருந்துகிறோம்.

**- ஆசிரியர்.**

# நரகம் இருப்பதாக நாம் ஏன் நம்புகிறோம் ?

நரகம் இருப்பதாக நாம் விசுவாசிப்பதால், நாம் நரகக்கினி மற்றும் கந்தகம் பற்றி பிரசங்கிக்கிறோம் என்று குற்றம் சாட்டப்படுகிறோம். ஜனங்கள் தங்கள் பாவத்தின் நிமித்தம் நரகம் போவார்கள் என்று நாம் சொல்லுவதில் மகிழ்கிறோம் என்று சிலர் நினைக்கிறார்கள். வேதாகமம் பேசுகிற நரகம் உண்டென்றும், துன்மார்க்கர் அங்கு போவார்கள் என்றும் நாம் நம்புவது உண்மைதான். ஆனால், யாரும் அங்கு போவது நமது விருப்பமல்ல. சிலர் தங்கள் தவறான வைராக்கியத்தால் அங்கு சென்று கொண்டிருப்பதை பார்த்து நாம் ஒருபோதும் மகிழுவதில்லை. மாறாக, அவர்கள் பரலோகம் வரவேண்டுமென்பதே நமது ஆசை, அதற்காகத் தான் நரகம் பற்றி நாம் பிரசங்கிக்கிறோம்.

நாம் தொடர்ந்து நரகம் பற்றி படிப்பதற்கு முன், அந்நரகம் பற்றி நாம் சொல்ல வேண்டியது அவசியம். நரகம் பற்றி நாம் முழுமையாக அறிந்து கொள்ள முடியாவிட்டாலும், வேதத்திலிருந்து நாம் சில காரியங்களை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, பாதாளம் என்கிற வார்த்தை மரணத்தை குறிக்கும்படி பயன்படுத்தியிருக்கிறது. மத்தேயு 16:18 ஆம் வசனத்தை வாசிக்கையில், "…..பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்று எழுதியிருக்கிறது. பாதாளம் என்பது இரண்டு இடங்களை உடையது, ஒன்று பரதீசு. மற்றொன்று, வேதனையுள்ள ஸ்தலதம். அநேகர் இதை நரகம் என்கிறார்கள், ஆனால் இது நரகமல்ல. இது தற்காலிமான ஓரிடம் தான். நியாயத்தீர்ப்புக்குப் பின்னாகத் தான் துன்மார்க்கர் நரகத்திற்குப் போவார்கள்.

ஏன் ஒருவன் இவ்வளவு பயங்கரமான இடத்திற்குப் போகவேண்டும்? அல்லது அன்புள்ள தேவன் ஒருவனை ஏன் நரகத்திற்கு அனுப்ப வேண்டும்? இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்படுவதால் நரகம் பற்றி இன்னமும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். நரகம், பிசாசுக்கும், அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தம் செய்யப்பட்ட ஓரிடம். துன்மார்க்கரைப் பற்றி கிறிஸ்து சொல்லுகையில், நியாயத்தீர்ப்பு நாளில் நியாயாதிபதி அவர்களைப் பார்த்து, "அவர்; சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்பார் என்றார். பிசாசு, பாவத்திற்கும், அவபக்திக்கும், துன்மார்க்கத்திற்கும் பிரதிநிதியாயிருக்கிறான். நல்லதிற்கும், செம்மை யானதற்கும் அவன் எதிரியாயிருக்கிறான். அவன் தேவ பகைஞன். அவனுக்கென்று தூதர்கள் உண்டு. ஆகவே தான், அவனுக்கும், அவனுடைய

தூதர்களுக்கும் நரகம் ஆயத்தமாயிருக்கிறது. அதே நேரத்தில், நரகம் மனிதனுடைய ஆத்துமாவுக்காக ஆயத்தம் செய்யப்பட்டது அல்ல. மனிதன் பாவம் செய்தாலும், நரகத்தின் தண்டனையிலிருந்து அவன் தப்பித்துக் கொள்ள தேவன் வழிவகை செய்துள்ளார். மனிதன் தேவனை நிராகரிக்கும் போதும் அவர் இயேசு கிறிஸ்துவுக்குள் கொடுத்திருக்கிற இரட்சிப்பை அவன் இழக்கும் போதுமே அவன் நரகம் போகவேண்டுமென்று தேவன் தீர்மானிக்கிறார். தேவன் அவனை நரகத்துக்கு அனுப்புகிறார் என்று நாம் சொல்லக்கூடாது. அவனே அங்கே போகும்படியாக தேர்ந்தெடுக்கிறான். ஆக, மனிதன் தான் தன்னுடைய நித்தியத்தை எங்கே கழிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறான்.

நரகம் பூமிக்கு கீழ் இருப்பதாகவும், பாதாளம் வானத்தில் இருப்பதாகவும் பெரும்பாலும் ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், இவ்விரண்டு இடமும் எங்கே இருக்கிறது என்று வேதாகமம் வெளிப்படுத்தவில்லை. அதற்கு மாறாக, நியாயம் தீர்க்கப்பட்ட பின்பு பரிசுத்தவான்கள் பரலோகத்திற்கும், துன்மார்க்கர்கள் நரகத்திற்கும் போவார்கள் என்று மாத்திரம் சொல்லுகிறது.

நரகம் தண்டனைக்கான இடம் என்று நாம் ஏற்கனவே கண்டோம். தன் சகோதரனை மூடன் என்றும், வீணன் என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு பாத்திரவான் என்று இயேசு கிறிஸ்து சொன்னார். தூதர்களை அனுப்பி தமது பரிசுத்தவான்களை கூட்டுவேன் என்று சொல்லிவிட்டு, துன்மார்க்கர் எங்கே போவார்கள் என்று சொல்லும்போது, "அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" என்கிறார் (மத். 13:42) யோவான் எழுதும் போது, "அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்", ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாக காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்" என்கிறார். (வெளி. 20:14,15) மேலும் அவன் சொல்லுகையில், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் அருவருப் பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரகாரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்". (வெளி. 21:8).

மேற்கண்ட இந்த வசனங்களிலே சரீரமரணம் பற்றியும் இரண்டாம் மரணம் பற்றியும் யோவான் பேசுகிறார். இரண்டாம் மரணம் நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது. அதாவது, நாம் நரகாக்கினை அடைந்து நித்திய தண்டனையை பெறும்போது தேவனிடத்திலிருந்து பிரிக்கப் படுகிறோம். அப்படிப்பட்டவனுக்கு நம்பிக்கை இல்லை. வருகின்ற

கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய பணிபற்றியும் யோவான் ஸ்நானகன் கூறுகையில், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப் பின்வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கியினால் சுட்டெரிப்பார் என்றான்". (மத். 3:11,12). பரிசுத்த ஆவியால் கிறிஸ்து ஞானஸ்நானம் கொடுப்பார் என்று அவன் சொன்னான். அதாவது, கிறிஸ்து தமது அப்போஸ்தலருக்கு வேறொரு தேற்றரவாளன் வருவார் என்று வாக்கு கொடுத்தார். பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேமில் அவர்கள் கூடி வந்திருக்கும்போது பரிசுத்த ஆவியினால் அவர்கள் நிரப்பப்பட்டார்கள். (யோவான் 16:13, அப். 2ம் அதி) ஆனால் கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானங் கொடுப்பாரென்று யோவான் ஸ்நானகன் சொன்னான். அது துன்மார்க்கர் அக்கினி கடலிலே பங்கடைவதை குறிக்கிறதாக இருக்கிறது. அவர் களத்தை நன்றாய் விளக்கி கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பாரென்றும் பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார் என்றும் அவர் சொல்லுகிறதினால் கோதுமை நீதிமான் களையும், பதர் துன்மார்க்கரையும் குறிக்கிறது. அந்த துன்மார்க்கர் அவியாத அக்கினியிலே வேதனைப்படுவார்கள்.

துன்மார்க்கரைப் பற்றி யோவான் எழுதுகையில், "அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையை தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி. 14;10,11).

இயேசு சொல்லும்போது, "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத். 10:28)". மேலும் அவர் சொல்லுகையில், "சர்ப்பங்களே விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித்

தப்பித்துக்கொள்வீர்கள்" என்கிறார் (மத். 23:33) தன் நாட்களில் வாழ்ந்த பரிசேயர்களையும், ஆயக்காரர்களையும் பார்த்து இயேசு சொன்ன எச்சரிப்பை தான் மேலே நாம் பார்த்தோம்.

எபிரெய ஆசிரியர் சொல்லும்போது, "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்" என்கிறார் (எபி. 10:28,29). பவுல் சொல்லும்போது, "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படி யாகும் அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத் தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர் களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத் தக்கவராயும், அவர் வரும் போது" என்கிறார் (தெச 1:7-9). துன்மார்க்கரையும், நீதிமானையும், பற்றி கிறிஸ்து சொல்லுகையில், "அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார் (மத். 25:46)". மேலும் அவர் சொல்லும் போது, "ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"(மத். 8:12). பவுல் சொல்லும் போது, "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் " என்கிறார் (ரோம : 6:23). யோவான் சொல்லுகையில், "மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்க தசிரியுமிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள்" என்கிறார் (வெளி. 20:10).

பரலோகத்தைப் பற்றியும், பாதாளத்தைப் பற்றியும் நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இயேசு ஒரு ஐசுவரியவான் மற்றும் தரித்திரனுடைய சம்பவத்தை நமக்குச் சொன்னார். அதை நாம் வாசிக்கையில், "ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும்

விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரிந்து, அனுதினமும் சம்பிரமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்த தரித்திரன் மரித்து தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்; மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய். லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான், அதை நினைத்துக் கொள்; இப்பொழுதுஅவன் தேற்றப்படுகிறான். நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து, எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்கு கூடாதபடிக்கு எங்களுக்கும், உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான். அப்பொழுது அவன்; அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரருண்டு அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி; அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு, அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்; அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்; அவர்கள் மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார். (லூக். 16:19-31). " வேதனையுள்ள ஸ்தலம் என்பது உண்மையான ஓர் இடமாக இருக்கிறபடியால் நாம் அங்கே போகாமலிருக்க எல்லா முன்னெச்சரிக் கையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

சிலர் ஒரு ஆத்துமா நரகம் போகும் போது அங்கே அழிந்து விடுகிறது. அத்தோடு அது முடிந்து போகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் நாம் பார்த்தது போல நரகம் என்பது நித்தியமான ஒரு இடம். அங்கே

செல்லுகிறவர்கள் நித்தியத்திற்கும் வேதனைப் பட வேண்டியதாக இருக்கிறது. வேறு வார்த்தையில் சொன்னால் பரலோகம் எப்படி நித்தியமானதோ அதுபோல நரகமும் நித்தியமானதே.

நாம் வாசித்த வசனங்களிலிருந்து சில காரியங்களை இறுதியாக தொகுத்துப் பார்ப்போம். பிசாசும் அவனுடைய தூதர்களும் நரகத்திலிருப்பார்கள். அவபக்தியானவர்களும் மாயக்காரரும், மார்க்க விஷயத்தில் வஞ்சிக்கப்பட்டவர்களும், மாம்சத்தின் கிரியைகளில் ஈடுபட்டிருக்கிறவர்களும், அவிசுவாசிகளும், நரகத்திலே பங்கடைவார்கள்.

நண்பர்களே; நாம் நரகத்தைப் பற்றி எச்சரிக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து நமக்கு இரட்சிப்பை அருளியிருக்கிறார். நாம் நரகம் போகக் கூடாது என்பதற்காக, தேவன் தனது பங்கை செய்திருக்கிறார். நாம் தான் நம்மை பரலோகத்திற்காக ஆயத்தம் செய்ய வேண்டும். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் படி அவர் நம்மைக் கட்டாயப்படுத்தமாட்டார். நாம் தான் முடிவெடுக்க வேண்டியவர்கள். கிறிஸ்து உங்களுக்குத் தரும் இரட்சிப்பை ஏற்றுக் கொள்வீர்களென்பதே எங்கள் ஜெபம். பவுல் சொல்லும் போது, "அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே. **இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம். இப்பொழுதே இரட்சணிய நாள்**" (IIகொரி 6:2). நாம் இளைப்பாறுதல் அடையும்படியாக கிறிஸ்து நம்மை அவரிடத்தில் அழைக்கிறார் (மத். 11:28-30) நம்முடைய இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருக்கக்கூடாது என்று எபிரெய ஆசிரியர் சொல்லுகிறார். (எபி. 2:3)

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் பரலோகம் போக ஆயத்தமாயிருக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால் நீங்கள் இழந்து போயிருக்கிறீர்கள், நரகம் உங்களுக்கு ஆயத்தமாயிருக்கிறது. நண்பர்களே, காலம் சமீபாயிருக்கும் போதே நீங்கள் கர்த்தருக்குச் செவிகொடுங்கள். அவரை விசுவாசியுங்கள், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புங்கள், கிறிஸ்துவை தேவ குமாரன் என்று அறிக்கையிடுங்கள், உங்கள் பாவங்கள் போக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்படி நீங்கள் செய்தால், கிறிஸ்து உங்களை இரட்சித்து தன் சபையில் சேர்ப்பார் (மாற். 16:16, அப். 2:38,47) அதன் பின்பு கர்த்தருக்காக ஜீவித்து, உண்மையுள்ளவர்களாக கடைசிவரை இருந்தால், ஒரு நாள் பரலோகம் உங்களுக்குச் சொந்தமாகும்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

# கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி ஏற்பட்ட சுனா
# கடலோரவாசிகளுக்கும் கிறிஸ்துவின் சபையாரின் சா
# செய்யப்பட்ட உதவிகளுக்கு தமிழக அரசாங்கம் ந


**G. PRAKASH, I.A.S.**
Additional Collector (Relief & Rehabilitation)
Kanniyakumari District
Nagercoil - 629 001. Tamil Nadu.

OFF : (04652) 279090, 278586
MOBILE : 94437 - 19094
FAX : (04652) 278019
E-mail : prakashgovind@rediffmail.com


DATED : 31.8.2005

**LETTER OF APPRECIATION**

This is certify that M/s.Healing Hands International, Chennai has distributed 3 sets of Fibre Boats together with Engines, Fishing Nets belonging to the people of Arockiapuram Hamlet of Kanyakumari District on 30.8.2005, which is one of the Tsunami affected village in Kanyakumari District.

On behalf of Government of Tamilnadu & District Administration, I express our sincere thanks for the supply of such livelihood assistance to the victims of Tsunami in the right time to the needy people.

**TO**
**Mr. Randy Steger,**
**President,**
**Healing Hand Internationals,**
**U S A.**

31/8/05
**ADDITIONAL COLLECTOR**
**(RELIEF & REHABILITATION),**
**NAGERCOIL.**

---


***Dr. J. Radhakrishnan, I.A.S.,***
**District Collector**

Collector's Office,
Nagapattinam – 611 003
Tel: 04365-252500, 252700 (O)
247800 (R)
Fax: 04365-253086 (O), 247800 (R)
Email: collector@nagal.tn.nic.in


**RC. 64220/2004/J1/ Dt.05.09.2005**

To
The President,
Healing Hands International,
72 M.H. Rpad, 2nd Floor,
Perambur, Chennai – 600 001.

Sir, **Sub:** Tsunami – Nagapattinam district – Services rendered in the tsunami-affected area -- commendation.

******

I wish to place on record and sincere appreciation for the services rendered by the Healing Hands International for the people affected by tsunami by distributing the following to the tsunami affected fishermen in Nagapattinam district

13 fibre boats

13 ELG Motors with fishing net

8 Katamarans with fishing net.

Further I will be very grateful if you could provide more assistance to the people in the tsunami-affected area of this district in consultation with Additional Collector. Material such as tricycles used for selling fish, utensils used by women to sell fish, sand cast removal, each for work etc. could be explored.

Prakash.

Yours faithfully,

District Collector,
Nagapattinam.

ி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட நம் மீனவர்களுக்கும்,
பாக *Healing Hands International* என்ற அமைப்பின் மூலம்
றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துள்ளது.

From
Thiru Ka.Balachandran,I.A.S.,
District Collector,
Tamil Nadu Villupuram.

To
The President,
The Healing Hands International
Humanitarian Relif,
72, M.H.Road,
2nd Floor, Perambur, Chennai- 600 011.

Lr.T3/39883/05/ Dated 05.08.2005

Sir

Sub: Tsunami – Tsunami relief Motor engines and fishing nets, given by Healing Hands international regarding.

Ref: Your letter dated 18.07.2005 and the discussion on 05.08.2005

o0o

I invite attention to the reference cited.

As per your letter, cited the District Collector, Viluppuram had along with Mr.David Martin and Mr.Carlminu given away 11 engines of 9 HP and 21 fishing net on 27.07.2005 to the Tsunami affected fishermen in Mudaliarkuppam.

Further we invite you to take part in the construction of permanent houses in the Tsunami affected areas.

Expecting your positive reaction.

Yours Faithfully

for Collector.
Special Deputy Collector, (R.R.)
Viluppuram.

I4/99059/2004

COLLECTOR'S OFFICE,
THOOTHUKUDI DISTRICT,
THOOTHUKUDI.

Dated: 28.09.2005.

**LETTER OF APPRECIATION**

This is to certify that M/s. Healing Hands International, Chennai has distributed 9 Catamarans belonging to the people of Veerapandianpattinam of Tiruchendur Taluk in Thoothukudi District on 2.9.2005, which is one of the Tsunami affected village in Thoothukudi District.

On behalf of Government of Tamilnadu and District Administration, I express our sincere thanks for the supply of such livelihood assistance to the victims of Tsunami in the right time to the needy people.

For Collector,
Thoothukudi District,
Thoothukudi.

பெண்கள் பகுதி

# பொன்னைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே தாய்மார்களே இம்மாதம் இத்தலைப்பின் கீழாக நாம் சந்திக்க கிருபை செய்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.

பொன்னை விட விலையேறப்பெற்ற ஒரு பொக்கிஷத்தை பெற்றுக் கொள்ள நமக்கு விருப்பமா? அப்படியானால், அப்படி என்ன பொக்கிஷம் அது? பரீட்சைபார்க்கப்பட்டும், சோதிக்கப்பட்டும் கிடைக்கக்கூடிய **"விசுவாசமே"**, அந்த பொக்கிஷம். நெருப்பு ஆலைக்குள் சென்று புடமிடப்படும்போதுதான் அழுக்குகள் நீங்கிய சுத்த பொன் கிடைக்கிறது. மிகக் கடுமையான சோதனைக்குள் சென்று வெளியே வரும்போதுதான் விலையேற்றப்பெற்ற விசுவாசமானது பரிசுத்தமாயும், பலமுள்ளதாயும் இருக்கிறது. எல்லோருமே இந்த் பொக்கிஷத்தை அடைந்து கொள்ள விரும்புகிறோம். ஆனால், தேவையான பரீட்சைக்குட்படவேண்டி வரும்போது நம்மை அதிலிருந்து ஒதுக்கிக் கொள்ள முயற்சிக்கிறோம்.

அப்போஸ்தலன் பேதுரு சக கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது **"இதிலே நீங்கள மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள். என்றாலும் துன்பப் படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள்"**.

**அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.** (1பேதுரு. 1:6,7). பேருதுவின் கருத்தை அப்படியே கூறும் வகையில் பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமாகிய மல்கியாவில் பார்க்கும்போது, "அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார். அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்" (மல் : 3:3).

நெருப்பினால் பொன் சுத்தமாக்கப்பட்டாலும் அது சோதிக்கப் படவும் வேண்டியதாயிருக்கிறது. பிரச்சனையான நேரங்களில் தான் மனிதன் யார் என்பது வெளிப்படுகிறது. "ஆபத்துக்காலங்களில் நீ சோர்ந்து போவாயானல், உன் பெலன் குறுகினது". (நீதி. 24:10) என்று ஞானி கூறுகிறார். பிரச்சனையான நேரங்களில்தான் தேவனுடைய பிள்ளைகள் சுத்திகரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற முடியும்.

பிரச்சனையான சமயத்தை எப்படி பயன்படுத்திக் கொள்வது? உலகம் இன்றைக்கு இதற்கு பல விளக்கங்களும், வழிமுறைகளையும் கொடுத்தாலும் இயேசு கிறிஸ்து கொடுக்கும் விளக்கமே ஒரு தனி சிறப்புடையது. "**ஒருவன் சுத்திகரிக்கப்படுவதற்கும், தேவனண்டையிலே ஒருபடி கிட்டிச் சேரவும் உதவியாயிருக்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதம் சோதனை**" பிரச்சனையான நேரங்களில் நாம் தேவனை மட்டும் சார்ந்திருக்கும் ஒரு சிலாக்கியம் கிடைக்கிறது. எப்போதுமே வசதியான சூழ்நிலையில் இருக்கும்போது நாம் ஒருபோதும் தேவன் மீது விசுவாசம் என்பதை பற்றி கற்றுக் கொள்ளவே முடியாது. பேதுரு கடலில் அமிழும்போது "**ஆண்டவரே, என்னை இரட்சியும்**" என்று கதறினான். (மத். 14:30) ஒருவேளை அவன் சுலபமாய் கடலில் நடந்திருப்பானானால், தன்னுடைய ஒரே நம்பிக்கை, தனக்கு ஒரே அனுக்கிரகம் அவர்தான் என்பதை உணர அவனுக்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் போயிருக்கும். அப்போஸ்தலனாகிய பவுலும் கொரிந்தியருக்கு எழுதும்போது "**பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.**" மரித்தோரை எழுப்பின தேவன் மேல் நம்பிக்கை யாயிருக்கத்தக்கதாக இப்படிப்பட்ட பாடுகள் என்று கூறுகிறார். (II கொரி. 1:8-10).

நாம் சோதனையினூடே செல்லும்போது பரிசுத்த தேவனுடைய சித்தத்திற்கு நம்மை கீழ்ப்படுத்துகிறோம். நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவே "**பட்ட பாடுகளினாலே**" கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். (எபி. 5:8) என்று வாசிக்கிறோம். அவருக்கே பாடுகள் அவசியமாய் இருந்ததென்றால் எனக்கும், உங்களுக்கும் எவ்வளவு அதிகம். அதை விடுத்து அவருடைய சித்தத்திற்கு மாறாக துணிந்து செயல்படக் கூடாது.

சில நேரங்களில் நாம் சில தவறான காரியங்களை நம் வாழ்வில் நடக்க அனுமதிப்போம். தேவன் அப்படியே நம்மை ஓர் அசை அசைத்து நாம் நலமானதை காணவும், அவர் விரும்புகிறதை ஏற்றுக்கொள்ளவும் செய்வார். இதை தன் சொந்த வாழ்க்கையில் அனுபவித்த பக்தன் யோபு

நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன். "**அவர் என்னை நருக்கி என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார்**" (யோபு. 16:12) என்று கூறுகிறார்.

அப்படியே யோனா தேவனுக்கு விரோதமாய் தன் பயணத்தை தொடர்ந்தபோது தேவன் அவனை மீன் வயிற்றிற்கு போகச் செய்து பிறகு சரியான பிரயாணத்தை மேற்க்கொள்ள உதவி செய்தார். பிரசங்கி 7:14-ல் பார்க்கும்போது, வாழ்வு காலத்தில் நன்மையை அனுபவித்திரு. தாழ்வு காலத்தில் சிந்தனை செய் என்று கூறப்பட்டிருக்கிறது. தாழ்மை காலம் என்று கூறும்போது சுகவீனம், துக்கம், பொருளாதார பின்னடைவு போன்றவைகளை கூறலாம். சுகவீனத்தில் மூலம் வலி, வேதனைகள் இருக்கும்போது அதன்மூலம் பொறுமை, தைரியம், நம்பிக்கை இவைகளை வளர்த்திக் கொள்ளலாம்.

இழப்புக்கள் போன்ற துயரமான நேரங்களில் இப்பூவுலகு நிலையற்றது என்று உணரமுடியும். பரலோகத்தில் நமக்கு பிரியமானவர் இருக்கும்போது அங்கே செல்ல நாம் ஆயத்தமாவோம். பணத்தை இழந்து பொருளாதார அடியை ஒருவன் வாழ்வில் சந்திக்கும்போது தன் குணாதிசயங்களை நன்றாக கட்டிக் கொள்ள அது வாய்ப்பாக அமையும். துயரங்கள் என்ற மழைதான் ஆவியின் கனிகளை உண்டு பண்ணச் செய்யும். இயேசு கிறிஸ்து இதுபற்றி கூறும்போது, "**கனிகொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதை சுத்தம் பண்ணுகிறார்.**" (யோ. 15:2).

கஷ்டமான நேரங்களில் தாழ்மையை நாம் அணிந்து கொள்கிறோம். தாழ்மை குணம் நம்மை இயேசுவண்டை கொண்டு செல்கிறது. மனிதர்களிடமும் சுமுகமாக நடக்க உதவுகிறது. பவுல் தன் அனுபவத்தில் கூறும்போது "**நான் என்னை உயர்த்தாதபடிக்கு என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு அது என்னை குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது**" (II கொரி. 12:7) என்கிறார்.

மட்டுமல்ல சோதனைகள் மூலம் பொறுமையை கற்றுக் கொள்கிறோம். "**உபத்திரவம் பொறுமையை உண்டாக்குகிறது**" (ரோமர் 5:3) பொறுமையை பல விளக்கங்கள் மூலம் விளக்கலாம். "அமைதியாக காத்திருக்குதலின் வல்லமை"; "நீண்ட சகிப்பு", அதிவேகமாக செயல்பட நம் சரீரம் ஒத்துழைக்கும்போது நம் எண்ணங்களை அப்படியே அமைதிப்படுத்துவது"; "மேதையை உருவாக்குவதற்கு பொறுமை தேவை"; இந்த பொறுமையானது ஏதோ கடையில் விற்கும் ஒன்றல்ல. இதை நாம் கற்றுக் கொண்டு பெற வேண்டும்.

வேதத்திலே பொறுமைக்கு உதாரணமாக யோபுவை கூறுவோம். புதிய ஏற்பாடு யோபுவைப் பற்றி கூறும் போது **"இதோ பொறுமையாயிருக்கிறவர்களை பாக்கியவான்களென்கிறோம். யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள்"** (யாக். 5:11) என்று பார்க்கிறோம். யோபைக் காட்டிலும் பொறுமையாய் வேறு யாராலும் இருக்க முடியாது. பல கேள்விகளை தானே கேட்டுக் கொண்டான். அதன் மூலம் விசுவாசத்தை பெற்றுக்கொண்டான். இப்போது என் கண்கள் காண்கிறது என்கிறான். புரிந்து கொள்ளுதலை பல கேள்விகளுக்குப் பிறகுதான் பெற்றுக் கொள்கிறான். நாமும் கூட பல சமயங்களில் வாசித்த வசனங்களை பலமுறை வாசித்திருந்தாலும் சோதனையான நேரங்களில் அந்த வசனங்கள் புதுபுது அர்த்தங்களைக் கொடுக்கும்.

மேலும், கஷ்டங்களையே சந்தித்த உள்ளத்திற்கு நன்றி என்ற குணம் நிறைய இருக்கும். மரணத்தின் விழிம்பை தொட்டவர்களுக்குத்தான் ஒவ்வொரு நாளும் தேவன் கொடுக்கும் ஈவு என்பது புரியும். தன்னவர்களை நீண்ட நாட்கள் பிரிந்திருப்பவர்களுக்குத்தான் குடும்பத்தில் ஒன்றாக வாழும் சிலாக்கியத்தின் மேன்மை என்ன என்பது புரியும். ஆக கஷ்டப்படும்போதுதான் தேவன் நமக்குச் செய்யும் காரியங்களின் மேன்மையை உணர்ந்து நன்றியாய் ஜீவிப்போம். இல்லாவிடில் எத்தனை அனுகூலமான சூழ்நிலை இருந்தாலும் குறைகூறியே வாழ்க்கையை கழிக்கிறவர்களாக இருப்போம்.

இன்னொரு காரியம், நாம் துன்பத்தினூடே செல்லும்போதுதான் மற்றவர்களின் வருத்தம் புரியும். **"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்"** (எபே. 6:2)என்ற வார்த்தையின்படி நாம் வாழக் கற்றுக்கொள்வோம். கிறிஸ்தவர்களாகிய நாம் உலகப் பாடுகளுக்காக மட்டுமல்லாமல் பரலோகம் செல்வதற்காகவும் நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.

கஷ்டமான, பாடுகள் நிறைந்த பாதைகள் வழியே செல்லும் ஒருவர் தான் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியும். பயத்தினால் குகைகளில் ஒழிந்து திரிந்தபோது தான், தாவீதினால் பல சங்கீதங்களை பாட முடிந்தது. அநியாயமாய் நடத்தப்பட்ட யோசேப்பு பொறுமையாய் அந்த ஏணியில் ஏறி எகிப்திய அரசாங்கத்தின் உயர் பதவியை அடைந்ததோடு பரலோக தந்தையின் அருகிலும் சென்று விட்டான்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து கெத்சமனேயில் வியாகுலப்பட்டு, பிறகு பல பாடுகளை அனுபவித்து கொடூர சிலுவையில் தொங்கி, மரித்து, இருண்ட குகைக்குள் அடக்கம் பண்ணப்பட்டபோதுதான் யாரும் செய்ய முடியாத **உலகத்தின் மிகச்சிறந்த வெற்றியான உயிர்த்தெழுதலை** அடைய முடிந்தது.

பக்தன் யோபு தன் பாடுகள் மூலமாக ஆவிக்குரிய பார்வையை பெற்றுக்கொண்டான். பொன்னிலும் விலையேறப்பெற்ற விசுவாசத்தை பெற்றுக் கொண்டான். சோதிக்கப்பட்டுப் பரீட்சை பார்க்கப்பட்ட அவன் விசுவாசம் பொன்னைக் காட்டிலும் மேலானது. யோபுவை போன்ற பக்தர்கள் இன்றைக்கும் நமக்கு ஆறுதலாகவும், பெலத்தை கொடுக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆக, கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே நாமும் கூட கஷ்டமான சூழ்நிலையின் உள்ளே பிரவேசிக்க பயப்படவேண்டாம். நம் விசுவாசம் சோதிக்கப்பட்டு, பரீட்சை பார்க்கப்பட்டு அந்த ஆலையிலிருந்து வெளியே வரும்போது, மிகவும் பிரகாசமுள்ள பொன் மிளிர்கிறது போல நம் விசுவாசமும் ஜொலித்துக் கொண்டிருக்கும். நம்மைப் பார்த்து மற்றவர்களும் அந்த இரகசியத்தை உணர்ந்து கொள்வார்கள். ஆகவே, பொன்னிலும் விலையேறப்பெற்ற **விசுவாசத்தை** நாம் பெற்றுக் கொள்ள நமக்கு சோதனை அவசியம். பரீட்சை அவசியம். சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்பதின் பொருள் என்ன? குறைகளும், இழப்புகளும், தோல்விகளும், காத்திருக்குதலும், இல்லாமையும் இவையாவும் நாம் அசைக்க முடியாத விசுவாசத்தைப் பெற்று தேவனண்டை கிட்டிச்சேர உதுவி செய்யும் காரணிகள் ஆகும். பொறுமையோடே ஓட்டத்தை தொடர்வோம். தேவன் தாமே நம்மோடு இருந்து நமக்கு பெலனாயிருப்பாராக! ஆமென்.

***- ரேச்சல் ராஜநாயகம்***

## பிரசங்கியுங்கள்!

| | |
|---|---|
| → திருவசனத்தை பிரசங்கியுங்கள் | II தீமோத் 4:2 |
| → சத்தியத்தைப் பிரசங்கியுங்கள் | யோவான் 8:32 |
| → அன்புடன் சத்தியத்தைப் பிரசங்கியுங்கள் | எபேசியர் 4:15 |
| → சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் | ரோமர் 1:16 |
| → உலகம் முழுவதுக்கும் பிரசங்கியுங்கள் | மத்தேயு 28:19,20 |
| → திருவசனத்தோடு ஒன்றும் கூட்டாமல் பிரசங்கியுங்கள் | வெளி. 22:18 |
| → திருவசனத்தோடு ஒன்றும் குறையாமல் பிரசங்கியுங்கள் | வெளி. 22:19 |
| → சுய மகிமையைத் தேடாமல் பிரசங்கியுங்கள் | 1 கொரி. 9:16 |

வாலிபர் பகுதி

# ஆழத்திலே உங்கள் வலைகளைப் போடுங்கள் !

கரை நாடி வரும் அலைகளைக் கொண்ட கடலில் இரை தேடி ஓடும் செம்படவர்களின் வாழ்வை நாம் கவனிக்கையில், இரவெல்லாம், இறைவன் தந்த விளக்காகிய நிலவையே தங்கள் ஒளியாகப் பெற்று, தங்கள் துணிவைத் துணையாக கொண்டு, குடிநீர் தரக்கூட ஆளில்லாத கடல் நீர் நடுவே பயணம் சென்று தங்கள் தொழிலை வளர்க்கப்பாடுபடுவதை நாம் காண்கிறோம். ஆழிக்குள் சென்ற ஆட்கள் திரும்பி வராவிட்டால் கரையிலிருக்கும் அவன் குடும்பம் அழுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும். கடலில் தொலைந்தவன் கடவுள் அருளால் மீண்டும் வருவான் என்ற நம்பிக்கையுடன் தங்கள் வாழ்க்கையை நகர்த்தும் பல மீனவர்களை நாம் அறிந்து தானே இருக்கிறோம். உயிரை பணயம் வைத்துச் செல்லும் அப்பயணத்திற்கு நாம் எவ்வளவு கொடுத்தாலும் தகுமென்று என்னொடு நீங்களும் சொல்லுவீர்களென நம்புகிறேன்.

விண்ணுலகம் விட்டு, தாம் உருவாக்கின உலக மக்களை மீட்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் மண்ணுலகம் வந்த விந்தை நாதர் இயேசுவின் வாழ்வு குறித்து நான்கு சுவிசேஷ நூல்கள் தேவ ஆவியின் துணையோடு எழுதப்பட்டது என்பதை நாமறிவோம். அதில் ஒன்று மருத்துவரால், திட்டமாய் விசாரிக்கப்பட்டு, ஒழுங்காய் எழுதப்பட்ட லூக்கா சுவிசேஷம், அதின் நான்கு அதிகாரங்களைப் புரட்டி ஐந்தாம் அதிகாரத்திற்கு நாம் வருகையில், கெனேசரேத்துக் கடலருகே இயேசு ஆண்டவரின் போதகம் கேட்க திரளான ஜனங்கள் கூடி வந்தார்கள். அப்பொழுது கரையில் நின்றுகொண்டிருந்த படவுகளை சற்று தள்ளி, அப்படகில் ஏறி ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார். போதகம் பண்ணி முடித்த பின்பு தான், நமது ஆண்டவர் சீமோனை பார்த்து; **"ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார்."**(லூக்கா 5:4).

## வார்த்தையின்படியே வலைகளைப் போட்டான்!

இரவெல்லாம் முயற்சி, கடலில் மீன்கள் கிடைக்குமோ என்று போடப்பட்ட வலைகள் வெறும் வலைகளாகவே திரும்பி வந்தது, வலைகள் வீசி, வீசி தோள்களெல்லாம் வலி, மீன் கிடைக்காததால் மன உளைச்சல், தண்டு வலித்தது புஜங்களெல்லாம் வலி என்று சீமோன் பேதுருவுக்கும் அவன் கூட்டாளிகளுக்கும் இவ்விரவு வரவில்லாயிரவாய் போனது, கதிரவன் உதித்திருந்த காலையில் அவர்கள் வலைகளை கழுவிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் தான் நமது ஆண்டவர் தமது போதகத்தை முடித்துவிட்டு

சீமோனை பார்த்து ஆழத்திலே போடுங்கள் என்கிறார். இரவில் தான் செய்த முயற்சிகளெல்லாம் வீண், ஓர் கசப்பான அனுபவம், அதன் நினைவு இன்னும் நீங்கவில்லை, தான் ஒரு அனுபவமுள்ள மீனவன் என்ற நிலையில் அவனிருந்த போது தான் நமதாண்டவர் அவனைப் பார்த்து இப்படிச் சொன்னார்.

சீமோன் பேதுரு இயேசாண்டவரைப் பார்த்து, "...ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; **ஆகிலும் உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன் என்றான்"** (லூக்கா. 5:5) பேதுரு தனக்கு இரவில் ஒன்றும் அகப்படவில்லை என்ற கசப்பான உண்மையை எடுத்துக் கூறினான். அனுபவமிக்க அந்த செம்படவனுக்கு இராமுழுவதும் பிரயாசப்பட்டும் ஒரு மீனும் அகப்படவில்லை. அப்படி ஒரு நிலை தனக்கிருந்த போதிலும், ஆண்டவர் சொன்ன வார்த்தையின்படி வலையை போடுகிறான். ஆதித் திரு வார்த்தையாயிருந்த, மனு உருவெடுத்த வல்லவரின் வார்த்தையின்படி போட்டான். "**சாயங்காலத்தில் அழுகை தங்கும் விடியற்காலத்திலே களிப்புண்டாகும்**" என்ற சங்கீதக்காரன் சொல்வது போல் பேதுருவுக்கு அதிகக் களிப்புண்டானது. வலைகள் கிழியத்தக்கதாக, படவு அமிழத்தக்கதாக மிகுதியான மீன்கள் அவர்களுக்கு அகப்பட்டது.

இயேசுவின் வார்த்தையின்படி செய்த பேதுரு, அதினால் கிடைத்த பலனைப்பார்த்து, "இயேசுவின் பாதத்தில் விழுந்து; ஆண்டவரே, **நான் பாவியான மனுஷன் நீர் என்னை விட்டுப் போக வேண்டும் என்றான்"** (லூக்கா 5:8). திரளான மீன்கள் அகப்பட்டதினால், பேதுருவுக்கு பிரமிப்பு, இவருடைய வார்த்தைக்கு இத்தனை வல்லமையா? என்று தன் புருவத்தை கேள்விக்குறியாக்கி தன் முகத்தில் தன் அகத்திலிருந்த வினாவை வெளிப்படுத்தி, தன் வார்த்தைகளினால் தன் நிலையை வெளிப்படுத்தினான். நான் உமக்கு முன் நிற்க பாத்திரன் அல்ல! நீர் செய்த இந்த நன்மைக்கு நான் பாத்திரன் அல்லன் என்ற நினைவின் விளைவு தான், ஆண்டவரே நீர் என்னை விட்டுப் போக வேண்டும்! என்ற வார்த்தைகள். எத்தனை தாழ்மை! இயேசுவின் வார்த்தையின்படி கேட்டால் நமது நிலை தலைகீழாக மாறும் என்பது இந்த நிகழ்விலிருந்து நமக்கு கிடைக்கும் ஓர் அருமையான பாடம்.

கெனேசரேத்துக் கடலில் நடந்த இந்த விஷயம் பேதுருக்கு மாத்திரம் ஆச்சரியத்தைத் தராமல், அவன் கூட்டாளிகளுக்கும் பிரமிப்பைத் தந்தது அந்த வேளையில் தான், நமதாண்டவர் சீமோனைப் பார்த்து, "**இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்**" (லூக். 5:11) எனக் கருமையான வாலிபர்களே! கடலில் உயிர் வாழும் மீன்களை தன் வலையினால் பிடித்துக் கொண்டிருந்த பேதுருவைப் பார்த்து, நமதாண்டவர், உலகம் என்னும் மனிதக் கடலில், நீ சுவிசேஷம் என்னும் வலையை விரித்து

இது முதல் எனக்காக ஆத்துமாக்களை பிடிக்கிறவனாக இருப்பாய் எனக் கூறுவதை நாம் காணமுடியும். பேதுருவின் மனதில் இது ஆழமாக பதிந்திருக்க வேண்டும். இயேசு ஆண்டவர் பேதுருவைப் பற்றி ஒரு முன்னறிவிப்பைத் தருகிறார்.

வேதாகமத்தின் பக்கங்களை நாம் வாசிக்கையில், பேதுரு சுவிசேஷ வலையை முதன்முதலில் பெந்தேகொஸ்தே நாளில் வீசுகிறார் எனக் காண்கிறோம். யூதர்களுக்குப் பண்டிகை நாள், உலகெங்குமுள்ள பக்தியுள்ள யூதர்கள் எருசலேமில் வாசமாயிருந்த நாள். அந்த நாளில் பேதுரு சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. வாலிபர்களே!, நாம் ஒன்றை யோசிக்க வேண்டும். இயேசுவின் வார்த்தையின்படி மீன் பிடி வலை போடும் போதும் பேதுருவுக்கு இருந்தது கசப்பான அனுபவம். இங்கேயும் இயேசுவின் வார்த்தையின்படி சுவிசேஷ வலையைப் போடும்போது, அவனுடைய மனதில் என்ன வினாக்கள் ஒலித்திருக்கும். சற்றொப்ப ஐம்பது நாட்களுக்கு முன்தான் தனது ஆண்டவரை யூத மதத் தலைவர்கள் கொலை செய்தார்கள். சீஷர்கள் மனதில் அந்த நிகழ்வு இன்னும் பசுமையாக இருந்தது. கிறிஸ்தவத்தை அறிவிக்க இது சரியான தருணம் தானா? இதே எருசலேமிலே தானே நான் இயேசுவை அறியேன் என்று சத்தியம் பண்ணினேன் இப்பொழுது இங்கே அவரை அறிவிக்க வேண்டுமா? என்ற வினாக்களெல்லாம் அவன் உள்ளத்தில் உதித்திருக்குமல்லவா?

சீமோன் பேதுரு இப்பொழுதும், இயேசுவின் வார்த்தையின்படியே வலையை போட்டான். ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் சுவிசேஷ வலையில் அகப்பட்டது. கிறிஸ்துவின் சபை ஆரம்பமானது. (அப். 2ம் அதி) சுவிசேஷமாகிய இந்த வலையை புறஜாதிகளுக்கு முதன் முதலில் விரித்தவரும் இந்தப் பேதுருவே. அப்பொழுதும் அவருக்கிருந்த சமுதாயத் தடைகளைத் தாண்டி அந்த வலையை அவன் விரித்தான். அந்த தடையை அவர் தாண்ட அவருக்கு தேவ தரிசனம் அவசியமாயிருந்தது. அந்த பரம தரிசனம் கண்டு, இயேசுவின் வார்த்தையின்படியே சுவிசேஷ வலையை கொர்நேலியு வீட்டாரிடம் விரித்தான். புறஜாதிகளும் கிறிஸ்துவின் சபையின் அங்கமானார்கள்.

எனக்கருமையானவர்களே! நாமும் கூட தேவ பெலனாக இருக்கிற சுவிசேஷ வலையை சமுதாயத்தின் ஆழத்தில் போடுவோம். பேதுரு அப்போஸ்தலன் இந்த சுவிசேஷம் பற்றி தன் முதிர்வயதில் கூறும் போது, "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" (1பேதுரு 1:25) என்கிறார். ஆகவே, என்றும் நிலைநிற்கிற சுவிசேஷமாகிய வலையை நாம் விரிப்போம். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், உலகிலுள்ள அனைவருக்கும் அதை விரிப்போம். அதிக ஆத்துமாக்களை அவ்வலையில் பிடி பரலோக கரை சேர்க்க தேவன் அருள் செய்வார் ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# புல்லைத்தின்ற ராஜா!

சிறுவர் பகுதி

[ Read
தானி : 4 ]

எனதருமை சிறுபிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் உங்களோடு கூட சேர்ந்து தேவனுடைய வார்த்தைகளை கற்றுக்கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த பகுதியில் வெளிவரும் காரியங்கள் உங்களுக்கு உபயோகமாயிருக்குமென்று தான் விசுவாசிக்கிறேன். இந்த மாதம், தன்னுடைய பெருமையினால் தேவனிடத்திலிருந்து வித்தியாசமான முறையில் தண்டனையை பெற்ற ஒரு ராஜாவைப் பற்றிப் பார்க்கபோகிறோம். சரி, கதைக்குள் போகலாமா?

நம்முடைய வேதாகமம், அநேக சுவாரசியமான நிகழ்ச்சிகளையும் அதே சமயம் அநேக சுவாரசியமான அறிவியல் தகவல்களையும் தருகிறது. சிலசமயங்களில் இவை இரண்டும் இணைந்த சில சம்பவங்களையும் நமக்கு கூறுகிறது. அப்படி ஒரு கதையைத் தான் நாம் பார்க்கவிருக்கிறோம்.

பழைய ஏற்பாட்டில் தானியேல் புத்தகத்தில், நேபுகாத் நேச்சார் என்ற மனிதனை நாம் பார்க்க முடியும். அவன் பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தின் ராஜாவாக இருந்தான். அவனைப் பற்றி கூறும்பொழுது, அவன் செல்வமும் பெலமும் நிறைந்த ராஜா என்று வேதம் கூறுகிறது. மேலும், அவனுக்கு ஒரு அழகான அரண்மனை இருந்தது. அவன் புது புது பட்டணங்களை பெரியதாக கட்டினான். ஆனால், அவனோ தேவனுக்கு மகிமை செலுத்தவில்லை. இப்படியே தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் இரவு, அவனுக்கு ஒரு கனவு வந்தது. அது அவனை தொந்தரவு செய்துகொண்டே இருந்தது. அது என்ன கனவு என்பதை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எனவே, ராஜா தானியேல் என்ற இளைஞனை அழைத்துவர சொன்னான். **தானியேல் தேவனுக்கு பயப்படுபவன்** என்றும் **மூன்று வேளை தேவனை நோக்கி ஜெபிப்பதும்** ராஜாவுக்கு தெரிந்திருந்தது. எனவே, தானியேலால் அந்த கனவை விளக்கி கூற முடியும் என நினைத்தார். எனவே தான் தானியேலை அழைத்தான்.

பின்பு ராஜா தானியேலிடம் தான் கண்ட கனவை கூறினார். அதைக் கேட்ட தானியேல் சோர்ந்து போனான். நாம் அதன் அர்த்தத்தை கூறினால் ராஜா மிகவும் வருந்துவார், அதை விரும்பமாட்டார் என்று அவன் தனக்குள்ளே சிந்தித்தான். இருந்தாலும் உண்மையை கூற வேண்டும் என்று நினைத்து ராஜாவிடம் அந்த கனவின் அர்த்தத்தை கூறினான் என்ன கூறினான்

என்று அறிய ஆசையாக உள்ளது தானே? ம்... தொடர்ந்து படியுங்கள். ராஜாவே, நீர் தேவனுக்கு மகிமையும் நன்றியும் செலுத்தாதது தவறு என்றும் தேவன் ராஜாவாகிய உம்மை அரண்மனை யிலிருந்து தள்ளி விடுவார் என்றும் கூறினான். ஆனால், இன்னும் கடினமாக, நீர் வெளியின் புல்லை மாடுகளைப் போல் மேயும்படி தேவன் செய்வார். நீர் தேவனுக்கு



நன்றியையும், மகிமையையும் செலுத்துவதை அறியும்வரை அப்படி ஆகும் என்று ராஜாவிடம் கூறினான் தானியேல்.

உண்மையாகவே, தானியேல் சொன்னது நிறைவேறியது. பாபிலோனின் ராஜா தன் அரண்மனையை விட்டு, வெளியிலே மாடுகளை போல புல்லை தின்றான். என்று வேதம் கூறுகிறது. தானி 4:33ல் அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப் போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப் போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது என்று கூறுகிறது.

சரி, நான் முன்னே ஒரு நிகழ்வையும், அது சம்பந்தமான அறிவியல் தகவல்களும் சேர்ந்த ஒரு சம்பவத்தை பார்க்கப்போகிறோம் என்று சொன்னேன். அப்படித்தானே? சரி, எப்படி? வேதத்தை நம்பாத சிலர் இந்த சம்பவம் நடந்திருக்க முடியாது என்று கூறுகிறார்கள். ஆனால் இன்றைய நாட்களின் மருத்துவத்திலும் ராஜாவுக்கு வந்தது போன்ற நோய் உள்ளது. அதன் பெயர் (போன்த்ரோபி) அது இன்றும் இருக்கிறது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் நேபுகாத் நேச்சரைப் போலவே செய்வார்களாம்.

சரி, வேதம் இதன் மூலம் நமக்கு என்ன உணர்த்துகிறது? தொடர்ந்து படியுங்கள். தேவன் தனக்கு மகிமைதராத ராஜாவை இந்த நோயினால் தண்டித்தார். இதற்குப் பின் அவன் திருந்தினானா? ஆம், (தானி 4:34,37) அவன் தன் வழிகளை மாற்றினான் என்று பார்க்கிறோம். பின்னர் குணமாக்கப்பட்டு மறுபடியும் அரண்மனைக்கு சென்று ராஜாவாக ஆட்சி செய்தான்.

இந்த சம்பவமானது, எப்படி நம்ப முடியாத ஒரு காரியம் உண்மையாக இருக்கும் என்பதற்கு சிறந்த உதாரணம். அறிவியல் சம்பந்தமான விஷயங்களை வேதம் சில சமயம் கூறும்பொழுது அதை நாம் கண்டிப்பாக சரி என்று நம்ப வேண்டும். ஏனென்றால் தேவன் பொய்யுரையாதவர் என்ன பிள்ளைகளே! நீங்களும் உங்கள் வாழ்க்கையில் தேவனை மறந்து தண்டனை பெற போகிறீர்களா? வேண்டாம். நீங்கள் எல்லா விஷயத்திலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் சரியா? தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்.

**R.A.R. NAYAGAM**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் வசனங்களை ஆராய்ந்துப் பார்த்ததில் இயேசு ஏன் நமக்கு ஒரு சிறந்த நண்பராயிருக்கிறார் என்பதற்கான நான்கு காரணங்களை நாம் கண்டு கொண்டோம். கடந்த மாதம் நான்காவது காரணமாக, மரணத்திலிருந்து இயேசு உயிர்த்தெழுந்ததை நாம் படித்தோம்.

தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் எபேசி 1:15-23 வசனங்களை வாசியுங்கள் பத்தொன்பதாம் வசனத்தின் ஆரம்பத்தில் தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் தேவனுடைய வல்லமையைப் பற்றிப் பேசுகிறார் அந்தப் பலத்த சத்துவத்தின் வல்லமை கிறிஸ்துவினிடத்தில் கிரியை நடப்பித்தது. அது எப்போது? தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினபோது!

தேவன் அதோடு தம்முடைய கிரியையை நிறுத்திவிடவில்லை. தேவன் அடுத்து என்ன செய்தார் என்று கவனியுங்கள். தேவன் கிறிஸ்துவை உன்னதங்களிலே தம்முடைய வலது பாரிசத்திலே உட்காரும்படி செய்தார். வேத வசனங்களில் "**வலது கரம்** என்பது, வல்லமையையும், அதிகாரத்தையும் குறிக்கிறது. எனவே பிதாவானவர் தம்முடைய பிரியகுமாரனை எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும் மேலாய் உயர்த்தினார். இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை இயேசுவுக்கு தேவன் தந்தருளினார். இயேசுவே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர். நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவோமானால், அவருடைய ஒரே சபையில் ஞானஸ்நானம் பெறுவோமானால் அந்த ஆவிக்குரிய சரீரத்தில் அவயவமாயிருக்கிறோம் (ரோமர் 6:3; 1 கொரி. 12:13,27).

இப்பொழுது இயேசு எல்லாக் காரியங்களுக்கும் தலையாக இருந்து கொண்டு கீழ்க்காணும் காரியங்களை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் செய்கிறார்.

1தீமோத். 2:5யை வாசியுங்கள். தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இயேசு கிறிஸ்து இருக்கிறார். இயேசு தேவனாகவும், மனுஷனாகவும் இருக்கிறபடியால் அவர் ஒரு பூரண மத்தியஸ்தராயிருக்கிறார்.

I யோவான் 2:1யை வாசியுங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவர் ஒருவர் இருக்கிறார். நமக்காக பரிந்து பேசுகிறவர் இந்த உலகத்தில் உள்ள எந்த ஒரு உயர்நீதிமன்றத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டவர் அல்ல அவர் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து. உங்களுக்காக யாராவது, இயேசு கிறிஸ்துவைப் போல் பரிந்து பேச முடியுமா என்பதை நினைத்துப்பாருங்கள்?.

இயேசு கிறிஸ்து நமக்கு பரிந்து பேசுகிறவராக இருக்கிறார் என்பதைப் பற்றி நினைக்கும் போது, சாத்தான் யோபுவை தேவனுடைய சந்நிதியில் குற்றம் சாட்டினான் என்பதை நினைக்க வேண்டும் (யோபு 1:9-12) தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய யோவான் சாத்தானை சகோதரர்களை குற்றஞ்சுமத்துகிறவன் என்று சொல்கிறார் (வெளி. 12:9,10) இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ்சாட்டுகிறவர் என்று யோவான் சொல்கிறார்.

தேவனுக்கு நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால் நம்மைப் பாதுகாக்க பரலோகத்தில் தேவனுடைய நீதியுள்ள குமாரனாகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். இந்த உலகத்தில் நீங்கள் எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் அத்தகைய சட்டப்பூர்வமான பாதுகாப்பை நீங்கள் பெற முடியாது. ஆனால், நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால் நாம் ஏழையாக இருந்தாலும் சரி, ஐசுவரியவான்களாக இருந்தாலும் சரி நமக்கு அந்த பாதுகாப்பு கிடைக்கிறது. எபிரெயர் 7:25யை வாசியுங்கள் இயேசு கிறிஸ்து தம்மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்கு வேண்டுதல் செய்யும் படிக்கு என்றென்றைக்கும் ஜீவிக்கிறார். நாம் ஜெபத்தில் தேவனிடத்தில் வரும்போது நமக்காக பரிந்துபேசுகிறதற்காக இயேசு அங்கே இருக்கிறார் இந்த காரியம் நமக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கிறது!.

ஆனால், எபிரெய ஆசிரியர் கூறும் வேறொரு காரியத்தையும் கவனியுங்கள். தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களை முற்றுமுடிய இரட்சிக்க இயேசு வல்லவராயுமிருக்கிறார். இயேசு நமக்காக பரலோகத்தில் பரிந்து பேசுகிறவராக இருப்பது நமக்கு எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்.

எபேசியர் 5:23ல் நாம் ஏற்கனவே பார்த்தபடி கிறிஸ்து தம்முடைய சபைக்குத் தலையாயிருக்கிறார், அவரே அந்த ஆவிக்குரிய சரீரத்துக்கு இரட்சகராயிருக்கிறார். எனவே நாம் அவருடைய ஒன்றான மெய் சபையில் இருப்போமானால் ஜீவிக்கின்ற மீட்பர் நம்மை நித்திய நித்தியமாக இரட்சிப்பார்.

எபேசியர் 5:29யை வாசியுங்கள். கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார். தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் நம்முடைய இரட்சகர் ஆவிக்குரிய போஷாக்கை அளிக்கிறார். தெளிவாக, அவர் தம்முடைய வசனத்தினால் நம்மை

போஷிக்கிறார் அதை தேவன் வசனத்திலே ஞானப்பால் என்று விளக்குகிறார் (1பேதுரு 2:2) மேலும், தேவன் (எபிரெயர் 5:12,14)ல் சொல்லும் போது பலமான ஆகாரம் என்று திருவசனத்தை சொல்லுகிறார். இயேசு தமது சபைக்கு தலையாயிருந்து கொண்டு இப்படிப்பட்ட அன்பையும், பரிவையும் நம்மிடம் காட்டுவது ஆச்சரியமல்லவா!

யோவான் 14:6ல் நாம் வாசிக்கும்போது இயேசு கிறிஸ்து தான் வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். அவரையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்! இயேசு ஜீவிக்கின்றபடியால் நாம் தேவனிடத்தில் அவர் மூலமாக சேரும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்! இந்த சிலாக்கியம் இல்லாதிருந்தால் துக்ககரமான ஒரு நம்பிக்கையற்ற வாழ்வை நாம் உடையவர்களாயிருப்போம்.

மத்தேயு 11:28-30ஐ வாசியுங்கள் மரணத்தை ஜெயித்து பரலோகத்தில் என்றென்றும் ஜீவிக்கின்ற நம்முடைய அருமை இரட்சகரின் அழகான அழைப்பை கவனியுங்கள்! உங்களையும், என்னையும் அவர் அன்புடன் அழைக்கிறார். அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்வதற்கும் நம்மை அழைக்கிறார். நாம் அவரிடம் விசுவாசத்தினாலும்,அவருக்கு கீழ்ப்படிகிற தினாலும் வருகிறோம். அவருடைய புதிய ஏற்பாட்டை ஜாக்கிரதையாக படிப்பதன் மூலமாக அவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் அவர் நம்மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிற பணியைச் செய்வதன் மூலமாக அவருடைய நுகத்தை நம்மேல் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், நம்முடைய எஜமான் அவருடை நுகம் மெதுவாயும், அவருடைய சுமை இலகுவாயும் இருக்கிறது என்று உறுதிசெய்கிறார். மேலும் இந்த காரியங்களை நாம் செய்வோமானால் இயேசு நமக்கு இளைப்பாறுதல் தருவார். நாம் நம்முடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலைக் கண்டடைவோம்! உயிர்த்தெழுந்த கர்த்தர் குழப்பமும், சச்சரவும் நிறைந்த இந்த உலகத்தில் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார். உண்மையிலேயே இந்த உலகமானது உபத்திரவங்களால் நிறைந்திருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக் கிறோம். (யோவான் 14:27; 16:33; ரோமர் 5:1) உதாரணமாக, நாம் ஜெபத்தின் மூலமாக சமாதானம் பெறுகிறோம். தேவன் நம்மை விசாரிக்கிற வரானபடியால் நம் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்து விடுகிறோம், பிலிப் 4:67; 1 பேதுரு 5:7 அந்த சமாதானம் இயேசுவின் ஒரே சரீரமாகிய சபையில் இருக்கிறது (கொலோ 3:15).

இயேசு கிறிஸ்து இவைகள் எல்லாவற்றையும் செய்து நாம் அவரை சிறந்த நண்பராக்கிக் கொள்வதற்கு சாத்தியமாக்கினார், நாமும் அந்த அன்பை அவருக்கும் நம்மை சுற்றிலுமுள்ளவர்களுக்கும் செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம்.

எபேசியர் 3:17-19யை வாசிக்கவும் நீங்களும், நானும் பிதாவுக்காகவும், அவருடைய குமாரனுக்காகவும் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாக வேண்டும். இதையே, வேறொரு வார்த்தையில் சொன்னால் அந்த அன்பு நம்முடைய வாழ்க்கையின் அஸ்திபாரமாக இருக்க வேண்டும். அந்த அன்பு நம்முடைய இருதயங்களிலே இருக்கிறது. ஏனென்றால், கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று நாம் உணர்கிறோம்.

II கொரி 5:14,15 யை வாசியுங்கள். கிறிஸ்துவினுடைய அன்பு நம்மை நெருக்கி ஏவவேண்டும். நம் எல்லாருக்காகவும் அவர் மரித்தார் என்ற உண்மையினால் நாம் செயல்பட ஏவப்படவேண்டும். நாம் நம்முடைய பாவங்களிலும், அக்கிரமங்களிலும் ஆவிக்குரிய பிரகாரமாய் மரித்தவர்களா யிருந்த போது அவர் நமக்காக மரிக்க சித்தமாயிருந்தார்.

இயேசு கிறிஸ்து நம் எல்லாருக்காகவும் எதற்காக மரித்தார் என்பதற்கான காரணத்தைக் கவனியுங்கள். அதென்னவென்றால் நாம் சுயநலமான வாழ்வை வாழக்கூடாது! மாறாக நாம் இயேசுவுக்காக வாழவேண்டும். 15 ஆம் வசனத்தில் இயேசுவை தேவன் எப்படி விவரிக்கிறார்? நமக்காக மரித்து எழுந்தவர் அவர் ஒருவரே!

யோவான் 14:15யை வாசியுங்கள் நம்முடைய அருமை இரட்சகரிடமிருந்து எவ்வளவு வல்லமையான வார்த்தைகள்! நாம் உண்மையிலேயே அவரிடம் அன்பு கூர்ந்தால் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக அதை நாம் நிரூபிப்போம். இயேசு பரலோகத்திலிருந்து உங்களையும் என்னையும் கீழே பார்க்கும்போது தாழ்மையான கீழ்ப்படிதலுடன் அந்த அன்பு நிரூபிக்கப்படுவதை காண்பாரோ?

கலாத் 2:20ல் நாம் வாசிக்கும்போது, பவுல் பழைய மனுஷனை சிலுவையிலறைந்தார். நாம் கிறிஸ்துவுக்குள்ளாகவும் அவருடைய மரணத்திற்குள்ளாகவும் ஞானஸ்நானம் பெறும்போது நாமும் அதையே செய்கிறோம். (ரோமர். 6:3-6) பவுலைப்போல அந்த பழைய பாவமனுஷன் நம்மில் வாழக்கூடாது, மாறாக கிறிஸ்து நம்மில் வாழவேண்டும்.

கிறிஸ்து எப்படி நம்மில் வாழ்கிறார்? நாம் கிறிஸ்துவின் சுவிசேஷமாகிய விசுவாசத்தினால் வாழ்கிறோம். அதாவது அந்த சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய நாம் பாடுபடுகிறோம். அவருடைய சிந்தை உடையவர் களாயிருக்கப் பாடுபடுகிறோம் (பிலி. 2:5) அவருடைய மாதிரியை பின்பற்ற பாடுபடுகிறோம் (1பேதுரு. 2:21)

இப்படிப்பட்ட தன்னலமற்ற தியாக வாழ்வை வாழ எது நம்மை ஏதுவுகிறது? பவுலைப் போல நாமும் இயேசு நம்மில் அன்பு கூர்ந்து நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்பதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும்.!


எபேசி 5:24ல் நாம் வாசிக்கும்போது இயேசு தம்முடைய சபைக்குத் தலையாயும், அந்த ஆவிக்குரிய சரீரத்திற்கு இரட்சகருமாயிருக்கிறபடியால் நம்மை நாம் அவருக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். அதாவது, அன்புடன் நம்முடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

II கொரி 10:5ல் நாம் வாசிக்கும்போது, இயேசுவுக்கான நம்முடைய அன்பானது நம்முடைய எண்ணங்களை எல்லாம் சிறைப்படுத்த நம்மை ஊக்கப்படுத்த வேண்டும். நம்முடைய மனதை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும் இப்படிப்பட்ட சுய ஒழுங்கை நாம் செயல்படுத்துவதின் நோக்கம் என்ன? கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதற்குத்தான் அவர் எப்படி சுயநலமில்லாமல், தியாகமனப்பான்மையுடன் கீழ்ப்படிந்தாரோ அப்படியே நாமும் கீழ்ப்படிவதற்குத்தான்.

பிலிப் 1:20,21ல் நாம் வாசிக்கும்போது, இயேசுவுக்கான உண்மையான அன்பும் தேவனுக்கான உண்மையான அன்பும் நம்முடைய இருதயங்களை நிரப்பும்போது நாம் அநேக காரியங்களை செய்வோம். **முதலாவது,** நம்முடைய எதிர்ப்பார்ப்பும், நம்பிக்கையும் நாம் செய்யும் எந்த காரியத்தினாலும் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். **இரண்டாவது,** தைரியமாக நம்முடைய சரீரத்தில் நம்முடைய வாழ்விலும், சாவிலும் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும். அதன் மூலம் நம்மில் கிறிஸ்து வாழ்கிறதை ஜனங்கள் பார்க்க வேண்டும். **மூன்றாவது,** கிறிஸ்து நமக்கு ஜீவன் சாவு நமக்கு ஆதாயம் என்று உறுதியாக நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் வாழ்வதற்கும், மரிப்பதில் நம்பிக்கைக்கும் கிறிஸ்துவே காரணமாயிருக்கிறார்.

இயேசுவின் நட்பு நம்மை இன்னும் அவருக்காக அநேக காரியங்களைச் செய்ய ஏவவேண்டும். அவைகளை நாம் வருகின்ற மாதத்தில் படிப்போம். வருகின்ற நாட்களில் நமக்காக மரித்தவரும், மரணத்தை ஜெயித்தவருமான இயேசுவுக்காய் வாழ்வோம்.

**சார்லி டிபால்மா.**



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi


Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம்
நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




# S.S. Music TV ல்

## திருமறை தியானம்

பிரதி திங்கட்கிழமை காலை 7.15 - 7.45 மணி

# தமிழன் டிவி யில்



## திருமறை தியானம்

பிரதி சனிக்கிழமை காலை 7.15 – 7.30 மணி
பிரதி ஞாயிறு இரவு 9.45 - 10.00 மணி

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவச பயிற்சி.

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

Published by Church of Christ, Kangayam.
Printed at : Konar Printers, Madurai. Editor : S. Rajanayagam.